பல்லாயிரம் கோடிக்கணக்கான ரூபாய் நிதிகளை ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பெண்கள், குறிப்பாக தமிழகத்திலுள்ள பெண்கள் வரலெஷ்மி விரதம் நோன்பு இருந்து மகாலெஷ்மி தங்கள் வீட்டிற்கு வர வேண்டுமென்று பிரார்த்தனையும், பூஜையும் செய்து வருகின்றார்கள். செல்வம் நிரந்தரமாக தன் வீட்டில் இருக்க வேண்டுமென்று வழிபாடு செய்வார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகின்ற அனைத்துத் திட்டங்கள் மூலமாகவும் தமிழக மக்களின் ஒவ்வொருவர் வீட்டிலும் மகாலெஷ்மியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனக்கென்று எதையும் வைத்துக்கொள்வதில்லை. தன்னகத்தே உள்ள ஓயாத உழைப்பு, அறிவுச்செல்வம், நேர்மை, தைரியம், ஈகை, அன்பு, அறம், அரவணைப்பு, சுறுசுறுப்பு இவை அத்தனையும் ஒன்றாக இணைத்து, திட்டங்களாக வடிவமைத்து, தமிழக மக்களின் மகாலெஷ்மியாய் இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களின் தாயாக விளங்கக்கூடிய அம்மா அவர்கள், நீங்கள் நீடூழி வாழ வேண்டும் இறைவா என்று வேண்டுகின்றோம். இங்கு மட்டுமல்ல இந்தியத் திருநாட்டின் மகாலெஷ்மியாக, வழிகாட்டியாக மாண்புமிகு அம்மா அவர்கள் வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து, எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

4. கவன ஈர்ப்பு

மாவட்ட காசநோய் மையங்களில் போதிய மருந்துகள் இருப்பு இல்லாமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

2014 ஆகஸ்ட் 8]

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மாவட்ட காசநோய் மையங்களில் போதிய மருந்துகள் இருப்பு இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து” மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

இந்தியா முழுவதும் உள்ள காசநோயாளிகளுக்கு மத்திய காசநோய் பிரிவிடமிருந்து (Central TB Division) காசநோய் மருந்துகள் பெறப்பட்டு காசநோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் முதல் நிலை காசநோய் மருந்துகள் மத்திய காசநோய் பிரிவிடமிருந்து (Central TB Division) பெறப்பட்டு சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள மருந்துக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளிலிருந்து அனைத்து மாவட்ட காசநோய் மையங்களுக்கும் காசநோய் மருந்துகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. மாவட்ட காசநோய் மையங்கள்மூலம் மாவட்டங்களில் உள்ள அனைத்து காச நோயாளிகளுக்கும் காசநோய் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

இரண்டாம் நிலை காசநோய் மருந்துகள் (Second line Anti/TB Drugs) (MDR TB, XDR/TB) (காசநோயாளிகளுக்கு உரியது) சென்னையில் உள்ள மாநில காசநோய் மருந்துக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டு அனைத்து மாவட்ட காசநோய் மையங்களுக்கும் வழங்கப்படுகின்றன. முதல் நிலை காசநோய் மருந்துகளும், இரண்டாம் நிலை காசநோய் மருந்துகளும், தற்போது 6 மாதங்கள் முதல் 7 மாதங்கள் வரை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலையில் காசநோய் மருந்துகள் தேவைப்பட்டால், மாவட்ட காசநோய் அலுவலர் மாநில காசநோய் அலுவலரிடம் அலைபேசிமூலம் வேண்டுகோளின்பேரில் காசநோய்க்குத் தேவைப்படும் மருந்துகள் அனைத்தும் உடனடியாக தேவைப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன.

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2014 ஆகஸ்ட் 8

எனவே, தற்போது தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட காசநோய் மையங்களிலும், மாநில காசநோய் மருந்துக் கிடங்கிலும் போதுமான அளவுக்கு காசநோய் மருந்துகள் இருப்பில் உள்ளதாலும், காச நோயாளிகளுக்குப் போதுமான அளவில் தொடர்ந்து மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாலும், காசநோயாளிகளிடமிருந்து மற்றவர்களுக்கு அந்நோய் பரவும் நிலை ஏதும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

பிற்பகல் 12-05

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். முற்றிய நிலையிலுள்ள MDR (Multi-Drug Resistant) என்று சொல்லக்கூடிய காசநோயினால் தமிழகத்தில் சில ஆயிரம் பேர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அந்த MDR முற்றிய நிலையில் உள்ள காசநோயாளிகளுக்குத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அவர்கள் மாத்திரைகளும் உட்கொள்ள வேண்டும். அதேபோல், ஞாயிற்றுகிழமையைத் தவிர, அனைத்து நாட்களிலும் அவர்கள் ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். தமிழகம் முழுவதும் உள்ள மாவட்ட காசநோய் மையங்களிலும் மாநிலக் காசநோய் மருந்து கடைகளிலும் போதுமான அளவுக்குக் காசநோய் மருந்துகள் இருப்பதாக விவர அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த இரண்டு மாதங்களாக MDR வகை காசநோயாளிகளுக்கு ஊசி மற்றும் மருந்துகள் விநியோகிக்கப்படவில்லையென்று பாதிக்கப்பட்ட நோயாளிகள் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். MDR வகை காசநோயாளிகள் சிகிச்சையைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டால் அது அவர்களுடைய உயிருக்கே ஆபத்தாக மாறிவிடும். காற்றுமூலம் எளிதாகப் பரவும் காசநோய் முறையாக சிகிச்சை பெறாவிட்டால் தும்மல் மற்றும் இருமல்மூலமாக குடும்பத்தினருக்கும் பரவும் ஆபத்து உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி MDR வகை காசநோயாளிகளுக்குத் தேவையான மாத்திரைகள் மற்றும் ஊசிகளைத் தடையில்லாமல் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமருகின்றேன்.

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற* MDR (Multi-drug resistant), *ஏற்கெனவே முதல்நிலை காசநோயாளிகள் தாங்கள் ஆறு மாதத்திற்கு சாப்பிடக்கூடிய அந்த மாத்திரைகளைச் சரியாக சாப்பிடாமல் அந்த* course-*ஐ முடிக்காமல் இருந்தால் அவர்களுக்கு இரண்டாம் நிலை காசநோய் ஏற்படும். இந்த இரண்டாம் நிலை காசநோய்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற* MDR (Multi drug resistant); *இன்னொன்று* XDR. *இந்த இரண்டாம் நிலையில் இருக்கக்கூடிய காசநோயாளிகளின் எண்ணிக்கை சில ஆயிரம் என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டுகூட 1,285 நோயாளிகள் அதனால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால் இன்றைக்கு, இந்த ஆண்டு அந்த* MDR *வகை இரண்டாம் நிலை காசநோயாளிகள் தமிழ்நாட்டில் 347 பேர் மட்டுமே என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் நிலை காசநோயாளிகளுக்கு அரசு செலவிடக்கூடிய தொகை வெறும் 6,000 ரூபாய். இந்த இரண்டாம் நிலை காசநோயாளிகளுக்கு அரசு செலவிடக்கூடிய தொகை, ஒரு நோயாளிக்குக் கிட்டத்தட்ட 1½ இலட்சம் ரூபாய். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே 220* TB Units *மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன. 802* Labs *செயல்படுகின்றன. மருந்துகளைப் பொறுத்தவரையிலும், மருந்துகள் இல்லை என்ற நிலை தமிழகத்திலே இல்லை என்பதை நான் அழுத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொல்லக்கூடிய இரண்டாம் நிலை காசநோயாளிகளுக்குத் தேவைப்படுகின்ற* Kanamycin Injection *உட்பட ஏறத்தாழ 20 மருந்துகள் இன்றிலிருந்து 7 மாதங்களுக்குத் தேவையான அளவிற்கு நம்மிடத்திலே கையிருப்பு இருக்கின்றது. எந்த இடத்திலும் காசநோய் பாதிக்கப்பட்ட ஒருவருக்குக்கூட மருந்து இல்லையென்ற நிலை தமிழகத்திலே இல்லை என்பதை அழுத்தமாகச் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்கிறேன்.*